செ. கு. எண்: 317 நாள்: 03.09.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 3.9.2012

ராமநாதபுரம் மாவட்டம், ராமநாதபுரம் நகரைச் சேர்ந்த திரு. பத்மநாபன் என்பவரின் மகன் திரு. ராஜராஜன் 21.6.2012 அன்று மதுரை – ராமநாதபுரம் சாலையில் இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது அரசுப் பேருந்து மோதியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை, வன்னிய தேனாம்பேட்டையைச் சேர்ந்த திரு. ராமச்சந்திரன் என்பவரின் மகன் திரு. ஆர்.பாபு 26.7.2012 அன்று தனது மிதிவண்டியில் அண்ணா நகர், 2–வது அவென்யு அருகே சென்று கொண்டிருந்த போது அரசுப் பேருந்து மோதியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்துகளில் உயிரிழந்த திரு. ராஜராஜன் மற்றும் திரு. பாபு ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்துகளில் உயிரிழந்த திரு. ராஜராஜன் மற்றும் திரு. பாபு ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**